## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.22/2024

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 16.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முத்துமாணிக்கம் (PW–2) | வயது | : | 59/2026 |
| த/க பெயர் | : | திரு.வரதராசு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | கூப்பாச்சிக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை;–**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc Botany படித்துள்ளேன். நான் தற்போது எங்கு தங்கியுள்ளேன் என்றால் 2/243, மேலத்தெரு, கூப்பாச்சி கோட்டையில் தங்கியுள்ளேன். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் 10 கிலோமீட்டர். எனது ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.
2) வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும் என்று வாதியானவர் வழக்குரையில் சொல்லியுள்ளாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் வாதிக்கு விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான், எனது மனைவி தான் விற்றார். தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே கிரய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள விபரத்தை வாதியிடம் சொல்லி தாவா சொத்து வாதிக்கு விற்பனை செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனோ என்றால் இல்லை. விற்பனை ஒப்பந்த ஆவணம் ரத்து செய்யாமல் தாவா சொத்து வாதிக்கு விற்பனை செய்யப்பட்டது எவ்வாறு என்று எனக்கு தெரியுமா என்றால் குடும்ப செலவிற்காக விற்றோம்.
3) பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து தற்போது எந்த நிலையில் உள்ளது என்றால் வாதி விவசாயம் செய்து வருகிறார். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தது என்றால் வாதி கேட்டதன்

பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரச்சனை எப்போது நடந்தது என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, 2021 இல் பகல் 11 மணியளவில் வாதி தாவா சொத்தில் சுற்றிலும் வேலி அமைத்து விட்டு முகப்பில் வேலியிட வரும்போது பிரதிவாதி 3 நபர்களை அழைத்து வந்து பிரச்சனை செய்தார். தாவா சொத்திற்கு அருகில் எனது நிலம் உள்ளதா என்றால் எனது அண்ணன் நிலம் உள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரச்சனை சம்பந்தமாக போலிசார் எனக்கு அழைப்பாணை அனுப்பி என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. வழக்கின் விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.17 10:02:25 +0530

District Munsif
Mannargudi.